மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2021 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20ம் நாள் புதன் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.வி.லட்சுமி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 209/2014 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. பட்டம்மாள் | வயது | .. 76 |
| க/பெ. | .. முனுசாமி | சாதி | .. |

20.01.2021 - வா.சா.1 குறுக்கு விசாரணை.

என்னுடைய பட்டா இடத்தில் ரோடு போடக்கூடாது என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எங்கள் ஊர் தலைவர் சாமிநாதன், வேலு, சம்பத், வேல்முருகன் இவர்களுடன் வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரும் ரோடு போட முயற்சித்தார்கள். என்னுடைய அ மற்றும் ஆ அயிட்ட சொத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அ அட்டவணை சொத்து என்னுடைய கணவருடையது. ஆ அட்டவணை சொத்து என்னுடையது. அ அயிட்ட சொத்தின் சர்வே எண்.243 ஆ அயிட்ட சொத்தின் சர்வே எண் எனக்குத் தெரியவில்லை. அ மற்றும் ஆ அயிட்ட சொத்துக்கள் நிலமா என்றால் வீடு. அ அயிட்ட சொத்தானது எனது கணவர் கிரையம் பெற்ற சொத்தா என்றால் அ அயிட்ட சொத்தானது புறம்போக்கு இடமாக இருந்ததில் நாங்கள் மஞ்சு கூரை வீடு கட்டி அனுபவித்து வந்ததால் எனது கணவர் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டது. அதன் பிறகு மஞ்சு கூரையை அகற்றி விட்டு சிமெண்ட் ஷீட் போட்ட வீடு கட்டியுள்ளோம். எனது கணவர் பெயருக்கு 1992ல் பட்டா கொடுக்கப்பட்டது. பட்டா கொடுப்பதற்கு முன்பாக எத்தனை வருடமாக அ அயிட்ட சொத்தை அனுபவித்து வந்தோம் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. ஆ அயிட்ட சொத்தானது நான் கிரையம் பெற்ற சொத்தா என்றால் இல்லை, எனது பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்ட சொத்தாகும். எந்த வருடம் பட்டா கொடுத்தார்கள் என்பது ஞாபகம் இல்லை. 1

முதல் 4 பிரதிவாதிகள் எனக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் நான் வழக்கு போட்ட பிறகு அவர்கள் வழக்கு தாக்கல் செய்தார்கள். அவர்களும் இதே சொத்திற்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

(Sd)/-D.Ravi,<br>
District Munsif,<br>
Polur.